உண்மைகள் (நெடுநாட்களுக்கு) உறங்குவதில்லை

ஒரு பேப்பர் 94ல் பிரசுரமாகியிருந்த 'சிறிலங்காவின் மனித வுரிமை விவகாரம்: மேற்குலகின் கரிசனையும் நம்மவர் சிலரின் பொறுப்பற்ற தனமும்' என்ற எனது கட்டுரை தொடர்பாக தமிழர் தகவல் நடுவத்தின் நிறைவேற்றுச் செயலாளர் திரு. வைரமுத்து வரதகுமாரின் விளக் கத்திற்கு நன்றி.

எனது கட்டுரை எழுதப்பட்ட சமயத்தில் ஐ.நா. மனித வுரிமைச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்காக நாடு களுக்கிடையிலான தெரிவு நடைபெறவிருந்தது. பல மனிதவுரிமை அமைப்புக்களும் புகழ்பெற்ற மனித வுரிமைச் செயற்பாட்டாளர்களும் அச்சபையில் சிறிலங்கா அங்கத்துவம் பெறுவதனை ஆட்சேபித்து பிரச்சா ரங்களை மேற் கொண்டிருந்தனர். அத்தகைய சூழ் நிலையில் அம்முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிக் காது, சிறிலங்கா அரசாங்கத்தின் கண்துடைப்பு முயற்சி ஒன்றிற்கு பாராட்டுத் தெரிவித்து தமிழர் தகவல் நடுவம் ஊடகக்குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தொடர் பான எனது அதிருப்தி அக்கட்டுரையில் வெளிப்பட்டிருந்தது.

அது தவிர, தமிழர் தகவல் நடுவத்தையோ அல் லது அதன் நிர்வாகிகளையோ தனிப்பட்ட முறை யில் விமர்சிக்கும் நோக்கத்தில் அக்கட்டுரை எழுதப் படவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் நீண்டகாலமாகச் செயற்படும் ஒரு அமைப்பு என்ற வகையில், அதுவும் சனநாயக வழியில் செயற்பட நாட்டங்கொண்ட ஒரு அமைப்பான தமிழர் தகவல் நடுவம் இதுபோன்ற விமர்சனங்களை ஆரோக்கியமான விவாதமாக எடுத்து கொள்ளும் என்ற நம்பிக்கை என்னிடம் இன்னமும் உள்ளதால், உங்களது விளக்கங்கள் தொடர்பான எனது கருத்துக்களை இங்கு பதிந்துள்ளேன்.

கடத்தப்பட்டவர்கள் அல்லது காணாமல் போனவர் களைக் கண்டறிவதற்காக, சிறிலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசிச் சேவையை பாராட்ட வேண்டிய அவசியம் பற்றி விளக்குவதற்காக நீங்கள் நான்கு விடயங்களை பட்டியலிட்டுள்ளீர்கள். அவற்றை உற்றுநோக்கும்போது, அவையாவும் தர்க்கரீதியான அனு கூலங்கள் பற்றியதாகவே உள்ளன. சிறிலங்கா அரசு இவ்விடயத்தில் இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்ப தும், மக்கள் உண்மையில் பயன்பெறுவார்கள் என்பதில் நீங்கள் அதீதமான நம்பிக்கை கொள்ளவில்லை என்ப தும் புலனாகிறது.

இலங்கைத் தீவின் நிலவரம் தொடர்பாக, சிறிதளவு அக்கறையுடைய அனைவருக்கும் அங்கு ஆட்கள் கடத்தப் படுவது நன்றாகவே தெரிந்திருக்கும். கிழக்கு மாகா ணத்தில் தமிழ்ப் பெண்கள் கடத்தப்படுவது, கொழும்பில் வர்த்தகர்கள் கடத்தப்படுவது போன்ற மேலதிகமான விட யங்கள் வேண்டுமானால் அவர்களுக்கு தெரியாமலி ருக்கலாம். ஆனால் அங்கு ஆட்கள் கடத்தப்படுவ தற்கும் சிறிலங்கா அரசிற்கும் உள்ள தொடர்பு இன்று அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. மனித வுரிமை காப்பகம் (Human Rights Watch)உட்பட்ட பத்து அனைத்துலக அளவில் செயற்படும் அமைப்பு களின் பிரச்சாரமும், தென்னாபிரிக்க மதகுரு டெஸ்ட் மன்ட் ரூற்று ஆண்டகை போன்ற மனிதவுரிமை செயற் பாட்டாளர்களின் கருத்துக்களும் இதனை வெளிக் காட்டியிருந்தன.

தங்களது ஊடகக்குறிப்பு சிறிலங்கா அரசு மனிதவுரிமை மீறல்களை கட்டுப்படுத்த முயற்சி எடுக்கிறது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது என்பதே எனது விமர்சனத்தின் அடிப்படையாகவிருந்தது. சிறிலங்கா அரசின் ஊதுகுழல்களான சில ஊடகங்களும் தங்களது அறிக்கையை தமக்கு சாதகமானதாக்கி பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தன என்பதிலிருந்து எனது விமர்சனத்தை சீர்தூக்கிப் பாருங்கள்.

எனது குற்றச்சாட்டை, முன்னர் விடுதலைப்புலிகள் மனிதவுரிமைகள் விடயத்தை கையாளுவதற்கான ஒரு பிரதிநிதியை ஏற்படுத்திய போது, அதனை வரவேற்று தாங்கள் வெளியிட்ட அறிக்கைக்கு கிடைத்த விமர்சன ங்களுடன் ஒப்பிட்டுள்ளீர்கள். நடுநிலைமையுடன் இயங்கு வதாகக் காட்டுவதற்காக, இவ்விதம் நீங்கள் குறிப்பிட் டிருக்கக்கூடும். ஆனால் சிறிலங்காவின் தொலைபேசிச் சேவை தொடர்பாக நீங்கள் பட்டியலிட்ட நான்கு விடயங் களையும். விடுதலைப்புலிகளின் முயற்சி தொடர்பாக நீங்கள் வெளியிட்ட அறிக்கையுடன் தொடர்புபடுத்திப் பார்த்தால், அதுவும் ஒரு வெறும் சம்பிரதாயபூர்வமான அறிக்கையாகவே எனக்குத் தோன்றுகிறது.

சிறிலங்காவில் ஆட்கள் கடத்தப்படும் விவகாரத்தை எடுத்துக் கொண்டால், அங்கு நடைபெறும் பெரும் பாலான கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் சிறிலங்கா பாதுகாப்புப்படைகளே உள்ளன. சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் வெவ்வேறு குழுக்களே இக்கடத்தல்களை மேற்கொண்டு வருகின்றன. இச்செயல்களில் ஈடுபடும் ஈபிடிபி, பிள்ளையான்-கருணா குழு, புளொட், ஈபி-பத்மநாபா குழு போன்றனவும் சிறிலங்கா சனாதிபதியின் கீழ் இயங்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடனேயே இயங்கி வருகின்றன. இவ்வொட்டுக் குழுக்களின் தலைவர்களுடன் தொடர்புகளைப் பேணிவருகின்ற தங்களுக்கு இதுவிடயத்தில் மேலதிகமான விளக் கங்களை நான் தரவேண்டியதில்லை.

இந்நிலையில், காணாமல் போனவர்களைக் கண்டறி வதற்காக ஒரு தொலைபேசிச்சேவையை ஏற்படுத்துவது என்பது, இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து, சிறிலங்கா அரசு தன்னை விடுவித்துக் கொண்டு, மூன்றாவது தரப்பின் மீது பழிபோடும் முயற்சியே தவிர வேறொன்றாக இருக்க முடியாது.

வழமையாக .இதுபோன்ற முயற்சிகளை, அரசுசாரா குடிசார் அமைப்புகள் வரவேற்று அறிக்கை வெளியிடும் நடைமுறை ஒன்று உள்ளது. இருப்பினும் தமிழர் தகவல் நடுவம் போன்ற ஒரு முதிர்ச்சியான தமிழர் அமைப்பு இச்சம்பிரதாயங்களைக் கடந்து, தமிழர் நலனில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகவுள்ளது.

இதுபோன்ற விடயங்களில் கருத்துப்பரிமாற்றம் செய்த பின்னர், விமர்சனங்களை முன்வைக்குமாறு குறிப்பிட் டிருந்தீர்கள். அதனை நெஞ்சார வரவேற்கும் அதே சமயம், மேற்குறித்த எனது கட்டுரையை வரைவதறகு முன்பதாக இதுவிடயமாக உங்கள் அமைப்பைச் சேர்ந்த ஒரு பணிப்பாளரிடம் கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டிருந்தேன் என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

- எழுபரிதி

பொங்கிடத் தமிழர் வாரீர்...

தமிழர்நாம் உரிமை பெற்று
தரணியில் நிமிர்ந்தே வாழ
தனியொரு நாடு வேண்டும் -
ஆனால்
தடைபல உண்டு உண்மை

தடைகளைத் தகர்த்து வீச
தாயக மண்ணில் வீரர்
தமதுயிர் துச்சம் என்றே
தளர்வின்றிப் பணியில் உள்ளார்

களத்திலே நிற்கும் அந்தக்
காளையர் உடன் பொருதக்
கடினமே அதை அறிந்த
கயவரின் கொடுமை கேளும்

மனிதரின் உரிமை என்று
மற்றவர் போற்றும் சட்டம்
மஹிந்தவின் ஆட்சி தன்னில்
மரணமாய்ப் போன தன்றோ?

கடத்தலும் பணப் பறிப்பும்
கைதியாய் அடைத்து வைப்பும்
கொலைகளும் செய்து நிற்கும்;
கொடியவர் செயல் உரைப்போம்

மனிதனை மிதிக்கும் அந்த
மந்திகள் செயலை இந்த
மாநிலம் அறியும் வண்ணம்
மன்றிலே உரைத்து நிற்போம்

பொங்கிடும் தமிழர் நாளில்
பொலிவுடன் நாமும் கூடி
எங்கணும் கேட்கும் வண்ணம்
எம்நிலை உரைக்க வாரீர்

ஆயிரம் மைல்கள் தாண்டி
அடுத்தவர் நாட்டில் நாங்கள்
அன்னிய மனிதர் போலே
அசட்டையாய் வாழ்தல் முறையோ?

எந்தனின் குடும்பம் மட்டும்
எழிலுடன்; வாழ்ந்தால் போதும்
என்பதாய் எண்ணி நிற்க
எருமைகள் அல்ல நாங்கள்

எம்மின மக்கள் எங்கும்
ஏதிலி அல்ல என்று
உலகமே உணர வைக்க
உணர்வுடன் கூட வாரீர்

தமிழர்நாம் ஒன்றாய் வாழ
தமிழீழம் வேண்டும் என்று
தரணியைக் கோரி நிற்கத்
தமிழரே திரண்டு வாரும்

- காவியா

Thai Restaurant for Sale (உடன் விற்பனைக்கு)

Popular Thai Restaurant for immediate sale: 56 to 58 seats, 12 years lease from August 2003. Sale price £65 K, Rent £25K pa, recently renovated.

Located in West Byfleet, Surrey

*Call **Siva** on **07961 730 617** or Email s.sivarajah@hotmail.co.uk*

Office Space Available

In Lewisham, Kingsbury & Eastham (Preferably for Accountants, Solicitors, Recruitment agency, Translators etc)

*Contact: **07772423287 / 07772423343 / 07989417663***

Office Space Available (Mitcham)

All facilities provided (phone, internet. etc.), Bills, rates included in the rent.

*Contact: **020 8640 4604***

Vacancy for 'Hotel Manager'
Job Description

Be responsible for the day to day operation of the hotel ensuring standards delivered and driving the business forward. Role will also involve staff motivation, financial and personal matters.

The right candidate should have the following;

**Minimum 3 years experience with management supervision and preferably with a diploma in hotel management and be able to demonstrate excellent motivational and leadership skills.*

- *Essential IT skills with MS-Office and other Hotel-management packages.*
- *Experience in travel & tourism preferable, especially in negotiations wit airline ticketing officers.*
- *Knowledge in Tamil, Sinhalese and Hindi languages would be an asset.*

Salary: 25, 000 - £ 28, 000 per annum (Negotiable); On Permanent basis.

Send your CV to Director

***UPSLINKK INN**, 206a – 208 High Street North, East Ham E6 2EJ*

Tuition for G.C.S.E (A/L)

Mathematics, Statistics & Mechanics.

Group and 'one-to-one' classes by an experienced teacher.

*Contact Mob: **07896 107 956***

Priya Restaurant.- 'For Idiyappam'

String Hoppers for Sale.

இடியப்பம் விற்பனைக்கு Ediapapam vitpanaikku /

100 இடியப்பம் £12, 500 இடியப்பம் £50.

*Call **020 8471 5552**, **020 8520 5552***

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML,
CSS,
Dreamweaver,
Flash
- Graphic design packages like Adobe photoshop

Knowledge of scripting language is highly desirable.

*Please forward your CV to **info@orupaper.com***

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX
MySQL
Apache
PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

*Please forward your CV to **info@orupaper.com***